## முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

## O.S.No.431/2021

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | கார்த்திகேயன் |
| தகப்பனார் / கணவர் | .. | ராதாகிருஷ்ணன் |
| வயது | .. | 45 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | காவேரிபாக்கம் |
| தாலுக்கா | .. | நெமிலி |

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

கன்னியப்பன் என்பவரை எப்படி எனக்கு தெரியும் என்றால் டிராக்டர் வியாபாரம் செய்வதால் தெரியும். நான் காஞ்சிபுரத்தில் ஈச்சர் டிராக்டர் ஏஜென்சியில் வேலை செய்தேன். கன்னியப்பன் என்னிடம் வந்து தான் எஸ்கார்ட் டிராக்டரை விற்றார் என்றால் சரியல்ல. அவர் என்னிடம் ரூ5,25,000/–த்தில் புதிய டிராக்டர் எடுத்தார் என்றால் சரிதான். மேற்படி தொகையில் ரூ.95,000/– செலுத்தினார், மீதி தொகைக்கு எங்கள் நிறுவனத்தில் உள்ள எக்சிகியூடிவ் இடம் பைனான்ஸ் போட்டு தர சொன்னேன் என்றால் சரிதான். ரூ.2,45,000/– பைனான்ஸ் போட்டு தந்துள்ளேன் என்றால் சரிதான். மீதி பாக்கி ரூ.1,75,000/– தொகைக்கு நிலம் அடமானம் போட்டு தர சொன்னேன் என்றால் சரியல்ல. கன்னியப்பன் எனக்கு மேற்படி ரூ.1,75,000/– அடமானம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. அதற்கு அவரிடம் அசல் மட்டும் செலுத்தினால் மட்டும் போதும் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. நான் டிராக்டர் வாங்கிய கடனுக்காக அடமான பத்திரம் போட்டுத்தர சொன்னேன் என்றால் சரியல்ல. கன்னியப்பன் என்பவருக்கு விபத்து ஏற்பட்டு அவர் சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்றால் நலமுடன் இருந்தார். தற்போது வரைஅவர் எந்த வேலையும் செய்ய முடியாமல் உள்ளார் என்றால் சரியல்ல. அவர் விபத்திற்கு பின்னர் என்னால் தொகையை செலுத்த முடியவில்லை என்றும், பின்னர் செலுத்துகிறேன் என்று சொன்னதற்கு நான்

**ஒத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த அடமான வழக்கு என்னிடம் அவர் டிராக்டர் வாங்கியதற்காக போடப்பட்டது என்றால் சரியல்ல.**

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**